## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

SRI LANKA IMMIGRATION AND EMIGRATION

# கொள்முதல் இரத்துச் செய்தமைக்கான அறிவித்தல்

**அனைத்து வருங்கால மனுதாரர்களுக்கும் கீழ்க்குறிப்பிடப்பட்ட விலைமனுக்கோரல் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது.**

**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்காக 5,000,000 இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் (e-Passports) மற்றும் 'N' தொடர் இயந்திரம் மூலம் படிக்கக்கூடிய வெற்று கடவுச்சீட்டுகள் 500,000 'N' series blank Machine Readable Passports (MRPs) கொள்வனவு செய்வதற்கான கொள்முதல்**

1. மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் தொடர்பான **2023-06-12** ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரம் மற்றும் **2023-07-06** அன்று வெளியிடப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டுக்கான விலைமனுக்கோரல் (EOI) சமர்ப்பிப்பதற்கான திகதி நீட்டிப்பு அறிவிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், மேலே குறிப்பிடப்பட்ட கொள்முதல் முழுவதுமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அனைத்து வருங்கால மனுதாரர்களுக்கும் தெரிவிக்கிறோம். முந்தைய பத்திரிகை விளம்பரத்தினை எமது அதிகாரப்பூர்வ இணையதளப் பக்கத்திலிருந்து **(www.pubsec.gov.lk)** பெற்றுக்கொள்ளலாம்.

2. இது தொடர்பில் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மேற்படி கொள்முதலை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனைத்து வருங்கால மனுதாரர்களுக்கும் **2023-07-19** முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நடத்தப்படும் அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் இரத்துச் செய்யப்படுவதாகவும், நபர் அல்லது நிறுவனங்களால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிக்கு செலுத்தப்பட்ட மீள்ச்செலுத்தப்படாத **ஐம்பதாயிரம் ரூபாய் (LKR 50,000.00)** ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஆவணத்தை பெற்றுக்கொண்டவர்களுக்கு மீளச்செலுத்தப்படும்.

3. மேற்குறிப்பிடப்பட்ட நபர் அல்லது நிறுவனங்கள் மீள்பெறமுடியாத கட்டணமான **LKR 50,000.00** ரூபாயைத் மீளப் பெற்றுக்கொள்வதற்காக தங்கள் நிறுவனத்தின் முகத்தலைப்பிலான கோரிக்கை கடிதத்தினை **ca@pubsec.gov.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

4. ஆர்வ வெறிப்பாட்டாளர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் மேலும் இந்த கொள்முதல் இரத்துச் செய்யப்பட்டமையால் ஏற்படும் சிரமத்திற்கு வருந்துகிறோம்.

5. மேலதிக விபரங்களை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவின் செயலாளரிடமிருந்து **+94112887697/ +94112887307** (நீடிப்பு : **307**) தொலைநகல் **+94112887784** மற்றும் **ca@pubsec.gov.lk** மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.


**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (CAPC),**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**14வது மாடி, "சுஹுருபாய",**
**ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல,**
**இலங்கை.**